00122

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

முகாமைத்துவ கற்கைகள் பீடம்

மனிதவள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கை நெறி

HRC2404- மனிதவள முகாமைத்துவத்துக்கான முடிவெடுத்தல் கருவிகள்

இறுதி பரீட்சை – 2025

காலம்: மூன்று (03) மணித்தியாலம்

---

**திகதி: 13/09/2025** **நேரம்: மு.ப 9.30 - பி.ப: 12.30**

அறிவுறுத்தல்கள்:

- இந்த வினாத்தாள் ஏழு (07) கேள்விகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு கேள்வியும் சம மதிப்பெண்களை கொண்டது. 07 கேள்விகளில் இருந்து ஏதேனும் 04 கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்கவும்.
- வழங்கப்பட்ட பதில் புத்தகத்தில் பதில் அளிக்கவும்.
- தெளிவற்ற கையெழுத்து குறைவான புள்ளிகளுக்கு வழிவகுக்கும்.

---

**வினா 1**

நீங்கள் மொத்தமாக 100 ஊழியர்களை கொண்ட ஒரு நிறுவனத்தில் ஊழியர்களின் சராசரி வருடாந்த பூர்த்திசெய்யப்பட்ட பயிற்சி நேரங்களை மதிப்பீடு செய்யும் மனித வள பகுப்பாய்வாளர். 50 ஊழியர்கள் மாதிரியாக (sample ) தெரிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு மாதிரி ஊழியருக்கும் பதிவு செய்யப்பட்ட பயிற்சி மணித்தியாலங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய நிகழ்வுக்கு பெறப்பட்ட 50 ஊழிய மாதிரிக்கான பெறுமதிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 120 | 50 | 96 | 51 | 53 | 75 | 48 | 79 | 27 | 112 |
| 106 | 107 | 43 | 22 | 17 | 28 | 138 | 25 | 64 | 141 |
| 126 | 69 | 120 | 25 | 70 | 146 | 113 | 144 | 135 | 9 |
| 121 | 148 | 9 | 144 | 99 | 121 | 119 | 117 | 132 | 130 |
| 70 | 124 | 104 | 18 | 70 | 119 | 77 | 124 | 10 | 65 |

a) மேலே உள்ள தரவுகளுக்கு பின்வருவனவற்றை உருவாக்குங்கள்.

I. நிகழ்வெண் பரவல் அட்டவணை. (Frequency Distribution Table) சம அளவு வகுப்பு இடைவெளிகளை 0 முதல் 10 வரை, 10 முதல் 20 வரை etc என கருதுங்கள். (6 புள்ளிகள்)

II. ஹிஸ்டோகிராம் (Histogram) (5 புள்ளிகள்)

III. அதிர்வெண் பலகோணம் (Frequency Polygon) (2 புள்ளிகள்)

b)பெறப்பட்ட நிகழ்வெண் பரவல் அட்டவணைக்கு பின்வரும் அளவீடுகளை கணிப்பிடுங்கள்.

I. சராசரி (Mean) (3 புள்ளிகள்)
II. இடைநிலை (Median) (4 புள்ளிகள்)
III. முகடு (Mode) (3 புள்ளிகள்)
IV. வீச்சு (Range) (2 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 2**

a) இரண்டாம் நபரானவர் , முதலாம் நபரை விடவும் மூன்று மடங்கு அதிகம் பெறக்கூடிய வகையிலும், மூன்றாம் நபரானவர் , இரண்டாம் நபர் பெறும் பங்கில் பாதியை பெற கூடிய வகையிலும், நான்காம் நபரானவர் மூன்றாம் நபரை விட 200/= குறைவாக பெற கூடிய வகையிலும் ,ஒரு நபர் வைத்திருந்த 10,000/= ருபாய் நான்கு ஊழியருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊழியரும் தனியாக பெறும் தொகைகளை கணக்கிடவும். (10 புள்ளிகள்)

b) ஒரு இளநிலை உதவியாளரின் சம்பளத்தின் மூன்று மடங்கு மற்றும் ஒரு மூத்த உதவியாளரின் சம்பளத்தின் கூட்டுத்தொகை ரூ. 120,000/=. மூத்த உதவியாளரின் சம்பளத்திற்கும் இளநிலை உதவியாளரின் சம்பளத்திற்கும் உள்ள வித்தியாசம் ரூ. 30,000/=. ஒவ்வொரு உதவியாளரும் பெறக்கூடிய சம்பளத்தை கணிப்பிடுக . (15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 3**

150 ஊழியர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் பணியாளர் திருப்தி குறித்த கணக்கெடுப்பை நடத்த மனிதவளத் துறை விரும்புகிறது. மனிதவள முகாமையாளர் 50 ஊழியர்களை மாதிரியாக (sample) தேர்ந்தெடுக்கத் திட்டமிட்டுள்ளார். நிறுவனத்தில் நான்கு திணைக்களத்தில் பின்வரும் விநியோகத்துடன் ஊழியர்கள் உள்ளனர்:

- மனிதவளத் திணைக்களம் - 39 ஊழியர்கள்
- நிதித் திணைக்களம் - 46 ஊழியர்கள்
- செயல்பாட்டுத் திணைக்களம் - 30 ஊழியர்கள்
- தகவல் தொழில்நுட்ப திணைக்களம் - 35 ஊழியர்கள்

a) மக்கள் தொகுப்பு அளவு (population size) மற்றும் மாதிரி அளவு (sample) என்ன?

(4 புள்ளிகள்)

b) 50 ஊழியர்களை கொண்ட எழுமாற்று மாதிரியை (random sample) நீங்கள் எவ்வாறு தேர்வு செய்யலாம் என்பதை விளக்குங்கள். (6 புள்ளிகள்)

c) 50 ஊழியர்களை கொண்ட அடுக்கமைவு மாதிரியை (stratified sample) நீங்கள் எவ்வாறு தேர்வு செய்யலாம் என்பதை விளக்குங்கள். (9 புள்ளிகள்)

d) 50 ஊழியர்களை கொண்ட முறையான மாதிரியை (systematic sample) நீங்கள் எவ்வாறு தேர்வு செய்யலாம் என்பதை விளக்குங்கள். (6 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 4**

a) மனித வளங்களின் பெறுமதியை அளவிட மனித வள கணக்கியலில் பயன்படுத்தப்படும் ஏதேனும் இரண்டு முறைகளைக் கண்டறிந்து சுருக்கமாக விளக்குங்கள். (10 புள்ளிகள்)

b) மனித வள கணக்கியல் (HRA) என்ற கருத்தாக்கத்தை விளக்குங்கள். அதன் குறிக்கோள்களையும் , நவீன நிறுவனங்களில் வினைத்திறனான மனித வள முகாமைத்துவத்துக்கு அது எவ்வாறு பங்களிக்கிறது என்பதையும் விளக்கவும். (15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்))

**வினா 5**

a) ஒரு நிறுவனத்தின் பங்கு விலை அதன் செல்வத்தின் குறிகாட்டியாக எந்த வழிகளில் செயல்பட முடியும்? பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குங்கள். (10 புள்ளிகள்)

b) ஒரு வணிகம் தனது ஊழியர்கள் மேல் முதலீடு செய்து நீண்ட கால செல்வத்தை உருவாக்கக்கூடிய மூன்று வழிகளை விளக்குங்கள். (15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 6**

a) மனித வளங்கள் இனிமேல் பணியமர்த்தல் மற்றும் ஊதிய செயல்பாடுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படப்போவதில்லை : இது ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி வெற்றியை இயக்குவதில் முக்கிய வகிபங்கு வகிக்கிறது. இந்த கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? பொருத்தமான உதாரணங்களை குறிப்பிட்டு நியாயப்படுத்துங்கள்.

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா 7**

a) ஒரு நிறுவனத்தின் செல்வத்தை உருவாக்குவதற்கு வாடிக்கையாளர் சேவையை முன்னிறுத்தும் ஊழியர்கள் ஏன் அவசியம்? சுருக்கமாக விளக்குங்கள் (10 புள்ளிகள்)

b) நிறுவன தந்திரோபாயங்களை திறம்பட செயல்படுத்த தேவையான திறன்கள் மற்றும் அறிவு ஒரு நிறுவனத்தின் ஊழியர்களிடம் இருப்பதை எந்த வழிகளில் உறுதி செய்ய முடியும்?

(15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**(25 புள்ளிகள் * 04 வினாக்கள் = 100 புள்ளிகள்)**

**-முழு பதிப்புரிமை பெற்றது -**

**Appendix**

Mean = $\bar{x} = \dfrac{\Sigma f x}{\Sigma f}$

Median = $L + \dfrac{n/2 - F}{f} * c$

Mode = $L + \dfrac{d_1}{d_1 + d_2} * c$